






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 24 25.06.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்
# ஸ்வாமி தேஸிகனின் ப்ரதான சதகம்

**பின் இதழின் தொடர்ச்சி**

41. அறம், பொருள், இன்பம், வீடு (தர்மார்த்தகாமமோக்ஷம்) என்ற நான்கு வித பயன்களில் (புருஷார்த்தங்களில்) நான்காவதாக மோக்ஷம் பற்றிய பயனே ப்ரதானம்

42. இதில் க்ருஷ்ணத்வைபயானார் என்பவரால் தொகுத்தளிக்கப்பட்ட (வியாஸராக) ஸர்வ உபநிஷத் ஸாராமான பகவத்கீதை ப்ரதானமாகும்.

43. அதில் "ஸர்வகுஹ்யதமம்" (மிகவும் ரகசியமானன) ப்ரதானம் அந்தச்லோகங்கள்

1. "மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமைவேஷ்யஸி ஸத்யம் தே ப்ரதி ஜானே ப்ரியோஸிமே"

நீ என்னிடம் எல்லைறயற்ற அன்புள்ளவன் இடைவிடாத பக்தி செய். எனக்கு பூரண கைங்கர்யம் செய். என்னையே எல்லாமாக நினைத்து பக்தி செய்தால் என்னாலே அடைவாய் இது ஸத்யம் )

2. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம்வரஜ அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

என்னை அடைவதற்கு காணப்படும் எல்லாவழிகளையும் கடினமானதால் விட்டுவிடு என்னையே சரணமாகப்பெற்று நான் உன்னை அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் கவலைப்படாதே.

44. இந்த இரண்டிலும் த்வயத்தில் சொல்லப்பட்ட சரணாகதியை விவரித்துச் சொல்லுகிற இரண்டாவது சலோகம் ப்ரதானம்

45. இந்த சரமச்லோகத்தில் முதல் வாக்யமே ப்ரதானம் : ஏனென்றால் இந்த வாக்யம் பகவானின் ஆணையாக வருவருகிறது.

46. பலனின் சொல்லப்பட்ட விஷயங்களில் முதல் வாக்யத்தில் சொல்லப்பட்ட பத்தியோக விஷயங்களை சேர்த்தாலும் நலம் என்பதால். இதுப்ரதானம்

47. அர்ஜூனனுக்கு உபதேசித்த கீதையில் சோகத்தை நீக்குவதற்காக அருளப்பட்ட இரண்டாவது அத்யாயம்: 16வது அத்யாத்திலும், சொல்லப்பட்ட கவலைத்தீர்க்கும் உபாயம் இதிலே அதிகம் என்றறிவது ப்ரதானம்.

48. இப்படி தனது நிலை அறிந்து பகவானிடம் சரணாகதி செய்கிறவர்கள் "உடனே வேண்டும்" (மோக்ஷம்) என்று நினைப்பவர் ப்ரதானர் என்பதறிவது ப்ரதானம்.

49. இப்படி ஆர்த்த ப்ரபத்தி செய்பவர்களில் காலபேதங்களில், பல பெறுவதில் (ஆர்தர்) பேதம் இருப்பதால இதில் "உடனே" என்பதில் பொருள் தெரிவது ப்ரதானம்.

50. திருப்தன் என்று சொல்லப்படக்கூடிய (கோரிய காலத்தில் மோக்ஷம் வேண்டும்) என்பவனுக்கு, அந்த நாளை எதிர்பார்த்து சாஸ்த்ரீய கார்யங்களை செய்து வருவது ப்ரதானம்

51. இப்படி எளிதாகச் சொல்லப்படக்கூடிய ப்ரபத்தியை ஸாங்கங்களோடு ஆசை பிறந்து விட்டபோது செய்ய துணைம் கொள்ளுதல் ப்ரதான. அதாவது தானே இதை விரும்பி அனுஷ்ட்டிக்கும்படி உடலும், மனமும் காலமும் கனிந்திருப்பது ப்ரதானம்

52. இப்படி ப்ரபத்தி அனுஷ்ட்டித்தவனுக்கு இங்கிருக்கும் காலம் (அதாவது ப்ரபத்தி பண்ணின பிறகு, மரணம் வரை) பகவத் ஆக்ஞா கைங்கர்யங்களை செய்து வரவேண்டும் (ச்ருதி. ஸ்ம்ருதி முதலியவைகளில் ஏனென்றால் கள். அவைகள் சொன்ன கார்யங்கள்) பகவானுடைய ஆணை இப்படி செய்யக்கூடாத கார்யங்களை செய்தால் அதற்கேற்ற ப்ராயச்சித்தங்களை செய்ய வேண்டும். இதை அறிவது ப்ரதானம்.

53. இப்படி செய்யும் கார்யங்களில் செய்ய வேண்டியவற்றை சிலகாலம் செய்யாமலும் இருக்கலாம் (உதாரணம் உடல் நலிந்தபோது பகவதாராதனம்) முதலிய. ஆனால் செய்யக்கூடாதென்பதை செய்வது கொடியது என்று அறிய வேண்டியது ப்ரதானம்.

54. இப்படி அனுக்ஞா கைங்கர்யங்களில் (அதாவது செய்தால் பகவான் உகப்பான் என்ற கைங்கர்யங்களில் உதாரணம் கோவிலுக்குப் போவது முதலியன ஞானம் சம்பாதிப்பது உத்தமம் (உபந்யாயம் காலக்ஷேபம் கேட்பது) முதலியவை ப்ரதானம் என்றறியவும் மற்ற கைங்கர்யங்களில் எல்லாம் பகவானுக்காகவே என்ற எண்ணம் ப்ரதானம்.

55. இப்படி பிறருக்கு உபதேசம் செய்யும்போது குருத்ரோஹி, நாஸ்திகர்களை முதலியவர்கள் தவிர்ப்பது ப்ரதானம்

56. இப்படி உபதேசம் பெறுவர்கள், ஆசார்யன் சொல்வதை கேட்பவராய் அதை அனுசரிக்க விருப்பமுடையவர்கள். அதற்கு சக்தியுடையவராய் இருப்பது ப்ரஹ்ம க்ஞானத்தை அடைவிரும்புபவராக இருந்தல் ப்ரதானம்.

57. இப்படி 40 ஸம்ஸ்காரங்கள் நிரம்பப்பெற்றவனாக எல்லோரிடம் தயை" இருப்பானாயாகிலும் கர்வமில்லாதவன். பொறுமை. பொறாமையின்மை தூய்மை, விருந்தோம்பல். லோபமின்மை ஆசையின்மை ஆகிய ஆத்மகுணங்களை கொண்டவனாயிருத்தல் ப்ரதானம் .இந்த நாற்பதில் ஒருசிலவே நிரம்பப் பெற்றவனாயினும் ஆத்ம குண பூர்த்தி உடையவனே ப்ரதானம்.

58. இப்படி இவன் செய்து வரும் கைங்கர்யங்கள் இவனுக்கு ஆத்ம க்ஷேமத்தை உண்டுபண்ணும் என்றாலும், பாகவதர் வழியாக பகவானுக்கு உகப்பு என்று எண்ணுவது ப்ரதானம். அதனால் பாகவதர்க்கும் கைங்கர்யம் செய்வது அவசியம்.

59. இப்படிப்பட்ட பாகவதர்களில் க்ஞானம் அதிகம் பெற்றவர் உபசரிப்பில் முக்யமானவர்

60. இப்படியே, வாழ்க்கையில் நிர்வேதம் (விரக்தி) உடையவர் நாம் மிகவும் கலந்து பழக ப்ரதானம்.

..............................தொடரும்